2003 ஜனவரி 28] [பேரவைத் தலைவர்]

எழுந்து இதனுடைய தமிழாக்கத்தை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அவையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் என்கிற முறை இனிமேல் கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதோடு விட்டு விடுங்கள்.

3. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

(1) திரு. கே. பாண்டுரங்கன்

(2) டாக்டர் தே. குமாரதாஸ்

(3) திரு. லா. சந்தானம்

(4) திருமதி சி.எம். சூரியகலா

(5) திரு. சி. சிவசாமி

(6) திரு. வி. ஜெயராமன்

4. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் ஒருசில தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். மற்ற தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

[இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

"2003 ஆம் ஆண்டு....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டு போய் விட்டார். தாங்களும் அதைப் பின்தொடர்ந்து போங்கள். ஆளுநர் அவர்கள் உரையைப் படிக்கிறபோது நீங்கள் வெளிநடப்புச் செய்துவிட்டு போய்விட்டீர்கள். நான் படித்தாலும் நீங்கள் வரப்போவது இல்லை. பின்னர் எதற்காக அதைப் போட்டு கிண்டிக் கிளறுகிறீர்கள்? போங்கள். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

(உள்ளிருந்த எஞ்சிய தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

"2003 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழிமொழிதல். திருமதி எஸ். ராஜம்மாள்.

@பக்கங்கள் 129 முதல் 169 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.